FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

1. District : Coimbatore மாவட்டம் | PS: Vigilance and Anti-Corruption காவல்நிலையம் | Year: 2026 ஆண்டு | FIR No.: C 8313249 21/2026/ACICB முத.அ. எண் | Date: 21.10.2026 0900hrs நாள்

2. (i) Act சட்டம்: The prevention of corruption Act 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 07.10.26 | Date to : நாள் வரை 17.10.2026

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 17.15 | Time to : நேரம் வரை 16.00hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 21.10.2026 | Time : நேரம் 08.30hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Volume -II | Time : நேரம் 08.30hrs

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Computer typed in Tamil

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் at about 6 km South East Coimbatore District.

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. N. Santhosh | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Nehru

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 29yrs | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம் —

(f) Occupation : தொழில் Building Construction | (g) Address : முகவரி Door No 15A, Bairavi Street-2, Gandhi Nagar, Idayarpalayam, Coimbatore - 25

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Pradeepkumar, Bill Collector. Coimbatore City Municipal Corporation, North Zone, Coimbatore.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No Delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

—

Submitted :

Separate Sheets enclosed here with

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

21/10/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

21/10/2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

D. SHEELA

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 21.10.2026
10.00hrs

Name: பெயர் .....
Rank: நிலை .....No. எண் .....

Inspector of police.
Vigilance and Anti corruption
Coimbatore

கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்கள் முன்பு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.21/2026/ AC/CB, u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவலறிக்கை வரிசை எண்.C 8313249-ன் தொடர்ச்சி.

இன்று 21.10.2026-ம் தேதி புதன்கிழமை காலை 08.30 மணிக்கு காவல் ஆய்வாளர் D.ஷீலா ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, கோவை இடையார்பாளையம் காந்திநகரை சேர்ந்த நேரு என்பவரது மகன் திரு.சந்தோஷ் என்பவர் கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகம் ஆஜராகி கணினியின் மூலம் தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினை என்னிடம் கொடுத்தார். நான் அப்புகாரினை படித்து பார்த்து, அப்புகார் சம்மந்தமாக இரகசிய விசாரணை மேற்கொண்டதில், கோயம்புத்தூர் மாநகராட்சியின் வடக்கு மண்டல அலுவலகத்தின் 14-வது வார்டில் பில்கலெக்டராக பணிபுரியும் திரு.பிரதீப்குமார் என்பவர் வாதியின் வாடிக்கையாளர்களது பெயர்களில் கட்டப்பட்டுள்ள வீட்டிற்கான கூடுதல் கட்டுமானத்திற்கான தொகை ரூ.69,168/- செலுத்தி மேற்படி வீட்டிற்கான தனித்தனி சொத்துவரி புத்தகங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்து முடிப்பதற்காக ரூ.40,000/-ஐ லஞ்சமாக கேட்டிருப்பது தெரியவந்தது. மேலும் மேற்படி புகாரின் அடிப்படையில் எதிரியின் நற்பெயர் குறித்து மேற்கொள்ளப்பட்ட எனது இரகசிய விசாரணையில் எதிரியின் நடத்தை சர்ச்சைக்குரியது என்பதும், புகார்தாரருக்கும் எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட எனது இரகசிய விசாரணையில் அவ்வாறு முன்விரோதம் எதுவுமில்லை என்பதும் தெரியவந்தது. நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையில் இருந்து எதிரியின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய போதிய முகாந்திரம் இருப்பதாக தெரியவந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று, இன்று 21.10.2026-ம் தேதி 09.00 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.21/2026/AC/CB, u/s.7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன் படி மேற்படி எதிரி திரு.பிரதீப்குமார் என்பவர் மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரர் அளித்த புகாரின் விபரம்

பின்வருமாறு:-அனுப்புநர் N.சந்தோஷ், வயது-29, த/பெ.நேரு, கதவு.எண்.15A, பைரவி வீதி-2 காந்திநகர், இடையர்பாளையம், கோவை-641025. பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோவை. அய்யா/அம்மா, நான் மேற்சொன்ன விலாசத்தில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் கடந்த 6 வருடங்களாக Saraswathy Associates என்ற பெயரில் கட்டுமான நிறுவனத்தை நடத்திவருகிறேன். மேற்படி நிறுவனத்தின் மூலம் எனது Client-களுக்கு கட்டிடம் கட்டி கொடுப்பதற்குண்டான அனைத்து வேலைகளையும் நானே செய்து கொடுத்துவருகிறேன். அதன்படி கட்டிடத்திற்கான உரிமம், அதற்கான மின்சார இணைப்பு, வீட்டு வரிகட்டுதல் மற்றும் குடிநீர் இணைப்பு போன்றவற்றை பெற்றுதருவதற்காகன அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொடுப்பது வழக்கம். அந்தவகையில், கடந்த 2024-ம் ஆண்டு ஜூன் மாதம், கோவை பொன்னையராஜபுரத்தை சேர்ந்த திரு.சந்திரன், த/பெ.கிட்டு செட்டியார் என்பவர் என்னை அணுகி, வெள்ளக்கிணறு பகுதியில் உள்ள Sakthi's Green Land-ல் அவரது பெயரில் சுமார் 2369 சதுரடியில் மனை எண்.13 என்ற மனையிடமும் அவரது மகன் திரு.ஸ்ரீனிவாசன் பெயரில் சுமார் 1500 சதுரடியில் மனை எண்.14 என்ற மனையிடமும், ஆகமொத்தம் 3869 சதுரடியில் மனையிடங்கள் இருப்பதாகவும், அவைகள் இரண்டையும் ஒன்றாக சேர்த்து வீடு கட்டி கொடுப்பதற்குண்டான அனைத்து வேலைகளையும் என்னையே முழுபொறுப்பேற்று முடித்து கொடுக்குமாறு கேட்டார். நானும் அவரிடம் சரியென்று சொல்லி மேற்படி மனையிடங்கள் சம்பந்தப்பட்ட ஆவணங்களை அவரிடம் பெற்றுக்கொண்டு, கடந்த 2024-ம் ஆண்டு ஜூன் மாதம் கோவை மாநகராட்சியின் வடக்கு மண்டல அலுவலகத்தில், சுமார் 2861 சதுரடிக்கு கட்டிட உரிமம் பெற்று வீடு கட்ட ஆரம்பித்து, கடந்த 26.07.2026-ம் தேதியில் வீட்டை கட்டி முடித்தேன். பின்னர் மேலே சொன்ன திரு.சந்திரன் மற்றும் அவரது மகன் திரு.ஸ்ரீனிவாசன் ஆகியோரது பெயரில் தனித்தனியாக வீட்டுவரி செலுத்துவதற்காக கடந்த 30.09.2026-ம் தேதியன்று நான் மேற்படி வடக்கு மண்டல அலுவலகத்திற்கு நேரில் சென்று விண்ணப்பதை கொடுத்தேன். மேற்படி விண்ணப்பத்தில் திரு.ஸ்ரீனிவாசன் பெயரில் 1800 சதுர அடிக்கும், திரு.சந்திரன் பெயரில் 1847 சதுரடிக்கும் தனி தனியாக இரண்டு வரிபுத்தகங்கள் வழங்குமாறு குறிப்பிட்டிருந்தேன். நான் கொடுத்த விண்ணப்பத்தின் அடிப்படையில் கடந்த

07.10.2026-ம் தேதி மாலை சுமார் 4.45 மணியளவில் வடக்கு மண்டல மாநகராட்சியிலிருந்து பேசுவதாக சொல்லி திரு.பக்தவத்சலம் என்பவரது 9361235598 செல்போன் நம்பரிலிருந்து எனது செல்போன் எண்.8667573873-க்கு தொடர்பு கொண்டு திரு.ஸ்ரீனிவாசன் மற்றும் திரு.சந்திரன் ஆகிய இருவர் பெயரில் உள்ள வீட்டை அளக்கவேண்டும் என்று சொன்னார், நான் சரியென்று சொன்னேன். அதன்படி அன்றைய தினம் மாலை சுமார் 5.00 மணியளவில் திரு.பக்தவச்சலம் என்பவர் மேற்படி கட்டி முடித்த வீட்டிற்கு வந்து அளவுகளை எடுத்து முடித்தவுடன், மேற்படி கட்டி முடிக்கப்பட்ட வீட்டின் அளவீடானது, மாநகராட்சியில் பெறப்பட்ட கட்டிட அனுமதிக்குக்குமேல் 786 சதுரடி கூடுதலாக கட்டப்பட்டிருக்கும் விபரத்தையும், மேற்படி கூடுதல் கட்டுமானத்திற்கான தொகையை செலுத்திய பின்னர்தான் வரிபுத்தகம் வழங்கமுடியும் என்று என்னிடம் தெரிவித்துவிட்டு, திரு.பக்தவச்சலம் என்பவர், கோவை வடக்கு மாநகராட்சி பில்கலெக்டர் திரு.பிரதீப்குமாரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, வீட்டின் அளவுகள் எடுத்து முடித்த விபரத்தை அவரிடம் தெரிவித்து, விண்ணப்பத்தில் வேண்டியிருந்ததுபோல் இரண்டு நபர்களின் பெயரில் வீட்டுவரி போடுவது சம்பந்தமாக அவரிடம் செல்போனில் பேசிவிட்டு, . என்னிடம் மேற்படி வேலையை செய்து முடிக்க பில்கலெக்டர் திரு.பிரதீப்குமார் அவர்கள் ஒரு வீட்டு வரி புத்தகத்திற்கு தலா ரூ.25,000/- வீதம் இரண்டு புத்தகத்திற்கும் சேர்த்து மொத்தம் ரூ.50,000/- அவருக்கு கொடுக்க வேண்டும் என்று போனில் பில்கலெக்டர் திரு.பிரதீப்குமார் சொன்னதாக அன்றைய தினம் சுமார் 5.15 மணியளவில் திரு.பக்தவச்சலம் என்னிடம் சொன்னார். அதன் பின்னர் 10.10.2026-ம் தேதி மாலை சுமார் 3.00 மணியளவில் திரு.பக்தவச்சலம் என்னை செல்போனில் தொடர்பு கொண்டு கூடுதல் கட்டுமானத்திற்கு செலுத்தவேண்டியது தொடர்பான பேப்பரை தயார் செய்துவிட்டதாகவும், அதை பெற்றுக்கொள்ள அலுவலகம் வரும்படி தெரிவித்தார். நான் அவரிடம் அன்றைய தினம் என்னால் வரமுடியாது என்று சொல்லிவிட்டேன். உடனே அவர் 12.10.2026-ம் தேதி காலையில் வரசொன்னார். என்னால் 12.10.2026-ம் தேதி காலையில் செல்ல முடியவில்லை. மேலும் அவர் என்னை செல்போனில் தொடர்பு கொண்டு பேசினார் நானும் அவரிடம் பேசிவிட்டு, அன்று மாலை சுமார் 5.30 மணியளவில் வடக்கு மண்டல அலுவலகம் சென்றபோது அவர் அங்கு இல்லை உடனே நான் அவரது செல்போனில் அழைத்தபோது திரு.பக்தவச்சலம் அலுவலாக

வெளியில் இருப்பதாக தெரிவித்தார். அதன்பின்னர் மறுநாள் 13.10.2026-ம் தேதி காலை சுமார் 10 மணியளவில் என்னை செல்போனில் தொடர்பு கொண்டு, ஏன் வரவில்லை என்று கேட்டார். அதற்கு நான் உறவினரின் இறுதிசடங்கில் இருப்பதாக தெரிவித்தேன். அதன்பின்னர் 14.10.2026-ம் தேதி மாலை சுமார் 5 மணியளவில் திரு.பக்தவச்சலம் என்னை செல்போனில் தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்ததின்பேரில் ராமகிருஷ்ணா மருத்துவமனைக்கு அருகில் உள்ள பாலத்திற்கு அடியில் சென்று திரு.பக்தவச்சலம் சந்தித்ததில் அவர் என்னிடம் 07.10.2026-ம் தேதியிட்ட வடக்கு மண்டல அலுவலக ந.க.எண்.7720/2026/அ மற்றும் கணினி எண்.162/NTR/23/26-27/0009479 என்ற கடிதத்தினை கொடுத்துவிட்டு, பில்கலெக்டர் திரு.பிரதீப்குமார் ரூ.50,000/-ம் கேட்டிருந்த விபரத்தை என்னிடம் கேட்டார். அதற்கு நான் யோசித்து சொல்வதாக கூறிவிட்டு அங்கிருந்து கிளம்பிவிட்டேன். மேலும் மேற்படி கடிதத்தில், அக்கடிதம் கிடைக்கப்பெற்ற 7 தினங்களுக்குள் கூடுதலாக கட்டப்பட்ட 786 சதுரடிக்கான கட்டணத்தை கட்டவேண்டும் என்றும், இல்லையென்றால் விண்ணப்பத்தின் மேல் நடவடிக்கை ஏதுவுமின்றி முடித்துவிடுவேன் என்று சொன்னார். அதனால் நான் 15.10.2026 காலை சுமார் 11.45 மணியளவில் கோவை வடக்கு மாநகராட்சி அலுவலகத்திற்கு பில்கலெக்டர் திரு.பிரதீப்குமார் அவர்களை நேரில் சந்திக்க சென்றேன். ஆனால் அவர் அங்கு இல்லாததால் அவரது இருக்கையின் அருகில் இருந்த மற்றொரு பெண் அலுவலரிடம் நான் வந்தவிபரத்தை பில்கலெக்டர் திரு.பிரதீப்குமாரிடம் தெரிவிக்குமாறு சொல்லிவிட்டு அங்கிருந்து கிளம்பிவிட்டேன். பின்னர் அன்றையதினம் மதியம் சுமார் 12.15 மணியளவில் 9944075365 என்ற செல்போன் எண்ணிலிருந்து பில்கலெக்டர் திரு.பிரதீப்குமார் அவர்கள் என்னை தொடர்பு கொண்டு என்னை Whats App call-ல் பேசும்படி என்னிடம் தெரிவித்துவிட்டு உடனே போனை கட்செய்துவிட்டார். அதன்படி நான் பில்கலெக்டர் திரு.பிரதீப்குமாரை Whats App call-ல் தொடர்பு கொண்டு, அவரிடம் எனது வாடிக்கையாளரான திரு.ஸ்ரீனிவாசன் மற்றும் திரு.சந்திரன் ஆகியோரது பெயரில் உள்ள பைல் கொடுத்திருந்த விபரத்தையும், அதன் அடிப்படையில், திரு.பக்தவச்சலம் என்பவர் மேற்படி வீட்டினை அளந்து முடித்தவுடன், அவ்வீட்டிற்கு இரண்டு தனித்தனி வீட்டுவரி புத்தகங்கள் வழங்குவது தொடர்பாக பில்கலெக்டர் திரு.பிரதீப்குமார்

அவர்கள் ரூ.50,000/- பணம் கேட்டதாக என்னிடம் சொன்ன விபரத்தையும், மேற்படி திரு.பக்தவச்சலம் என்பவர் யார் என்றே எனக்கு தெரியாது என்றும், உங்களைதான் எனக்கு தெரியும் என்று சொன்னதால், பில்கலெக்டர் திரு.பிரதீப்குமார் அவர்கள் சரியென்று சொல்லி இனிமேல் தன்னையே பார்க்கும்படி சொன்னார். உடனே நான் அவரிடம், அவர் கேட்டிருந்த தொகை ரொம்ப அதிகமாக இருக்கு என்றும், கொஞ்சம் கம்மி பண்ணுங்க என்று கேட்டேன். அதற்கு அவர் சரி ரூ.40,000/- கொடுங்கள் என்று சொன்னார். அதற்கு நான் "அலுவலகத்திற்கு கட்டவேண்டிய கட்டணத்தை மட்டும் கட்டிவிட்டு அவர் கேட்ட ரூ.40,000/-யை சொத்துவரி புத்தகத்தை வாங்கும்போது கொடுக்கட்டுமா" என்று கேட்டேன். அதற்கு அவர், மாநகராட்சிக்கு செலுத்தவேண்டிய மேற்படி கூடுதல் கட்டுமானத்திற்கான தொகையான ரூ.69,168/- மற்றும் அந்த வேலை முடித்து கொடுப்பதற்காக அவருக்கு தனியாக ரூ.40,000/-ம் சேர்த்து மொத்தம் ரூ.1,09,168/- கட்டினால் ஒரே நாளில் தனித்தனி பெயரில் இரண்டு வரி புத்தகங்களை கொடுக்க ஏற்பாடு செய்வதாகவும், அவர் கேட்டபணத்துடன் மறுநாள் 16.10.2026 காலை 9.30 மணிக்கு வடக்கு மண்டல அலுவலகத்திற்கு வரும்படி தெரிவித்தார். நான் அவர் சொன்னபடி மேற்படி அலுவலகம் செல்லாததால் 16.10.2026-ம் தேதி காலை சுமார் 9.30 மணிக்கு Whats App call-ல் அழைத்திருந்தார். நான் துக்கவீட்டில் இருந்ததால் என்னால் போனை எடுக்கமுடியவில்லை. பின்னர் மீண்டும் அவர் அன்று மாலை சுமார் 03.50 மணிக்கு எனது செல்போனிற்கு Whats App call-ல் அழைத்தார் நான் அவரது அழைப்பை எடுத்து எனது உறவினர் இறந்துவிட்டதால் அவரது துக்க நிகழ்வில் இருப்பதாக அவரிடம் தெரிவித்தேன். அதற்கு அவர் மறுநாள் வரும்படி சொல்லிவிட்டு போனை கட்செய்துவிட்டார். பின்னர் 17.10.2026 அன்று மதியம் சுமார் 1.30 மணிக்கு பில்கலெக்டர் திரு.பிரதீப்குமார் அவர்கள் எனது செல்போனிற்கு அழைத்து இன்றைக்கு வருவீர்களா என்றும், நான் கொடுத்த இரண்டு பைலுக்கும், கையெழுத்து வாங்க போவதாக சொன்னார். அதற்கு நான் Client Pooja Holidays-ல் இருப்பாரெனவும் அதனால் அவரிடம் தொகை வாங்க முடியாது என்று சொன்னேன். அதற்கு அவர் Pooja விடுப்பு முடித்துவிட்டு வாங்க என்று சொன்னார். பின்னர் 20.10.2026 அன்று இரவு சுமார் 7.30 மணியளவில் பில்கலெக்டர் திரு.பிரதீப்குமார் அவர்கள் எனது செல்போனில் அழைத்தார் அப்போது நான் அவரிடம் எப்போது

அலுவலகம் வரட்டும் என்று கேட்டேன். அதற்கு அவர் மறுநாள் காலையில் அவரே கால் பண்ணுவதாக சொன்னார். அதன் பின்னர் நான் யோசித்து பார்த்ததில், மேற்சொன்ன எனது Client-க்கு புதிதாக கட்டப்பட்ட வீட்டிற்கு மாநகராட்சிக்கு செலுத்தவேண்டிய தொகை ரூ.69,168/-ஐ தவிர, சொத்துவரி புத்தகத்தை கொடுக்க ஏற்பாடு செய்வதற்கு பில்கலெக்டர் திரு.பிரதீப்குமார் லஞ்சமாக கேட்ட ரூ.40,000/-ஐ கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே கோவை வடக்கு மண்டல மாநகராட்சி அலுவலகத்தின் 14-வது வார்டின் பில்கலெக்டராக பணிபுரியும் திரு.பிரதீப்குமார் என்பவர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, sd.XXXXX (N.Santhosh). இடம்- கோவை. நாள்-21.10.2026, Respected Sir, Received the complaint on 21.10.2026 at about 08.30 hrs. sd.XXXXX, (D.SHEELA) Ins of Police, V&AC, Coimbatore, 21.10.2026. Respected Sir, After conducting a Discreet enquiry, a case in Coimbatore V&AC Cr.No.21/2026/AC/CB, u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 was registered by me on 21.10.2026 at about 09.00 hrs. sd.XXXXX, (D.SHEELA) Ins of Police, V&AC, Coimbatore, 21.10.2026. இம் முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் வாதியின் புகார் ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

(D.ஷீலா), 21/10/26

காவல் ஆய்வாளர்,

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,

கோயம்புத்தூர்.